***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 280/2025 – P.W.1   (LW1)***

| | |
|---|---|
| *Name* | சுதாகர் |
| *Father/Husband's Name* | பக்கிரிசாமி |
| *Village* | ஆதிச்சபுரம் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Age* | *46* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 22.07.2026*

***அரசு தரப்பில்  முதல் விசாரணை***

1. நான்  தற்போது மேற்படி முகவரியில் வசித்து எலட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன்.  ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மருமகன் ஆவார். கடந்த 2024 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை.  ஒருநாள் இரவு சுமார் 09.00 மணியளவில் மின்வெட்டு காரணமாக எனது வீட்டு வாசலில் திவாகர் என்பவருடன் பேசிக்கொண்டிருந்தேன்.  அப்போது ஒரு இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு எரியாமல்  அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத ஒரு நபர்  வேகமாக வந்து என் மீது மோதிவிட்டார்.  அதில் எனக்கு தலையின் வலது பக்கம் மற்றும் இடது கையில் வெட்டுக்காயம் போல் ஏற்பட்டு ரத்தம் வந்தது. பின்னர் அருகிலிருந்த திவாகர் என்னை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். நான் சிகிச்சையிலிருந்தபோது போலிசார் என்னிடம் விசாரித்தார்கள். நான் வாய்மொழியாக சொன்னேன். என்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். தற்போது  நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.  (**புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழுங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரியுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரி என் மருமகன் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 27.09.2024-ம் தேதியன்று இரவு 8.45 மணியளவில் நான் திவாகர் வீட்டிற்கு சென்றேன் என்றும், அப்போது திவாகர் வீட்டிற்குள் இருந்த ஆஜர் எதிரி என்னை கொச்சை வார்த்தையால் திட்டினார் என்றும், நான் எனது வீட்டிற்கு திரும்பி சென்றுக்கொண்டிருந்தபோது என் பின்னாலே வந்த ஆஜர் எதிரி என் வீட்டிற்கு எதிரே வந்து என்னை கொச்சை வார்த்தையால் திட்டியும், அருவாள் மனையால் எனது தலையின் வலதுபக்கமும், இடது கையிலும் வெட்டினார் என்றும், அருகிலிருந்த ரகுநாத், தேவா, பிரபாகர் ஆகியோர்கள் ஓடி வந்தார்கள் என்றும், ஆஜர் எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாள்மனையால் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், திவாகர் என்னை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார் என்றும், நான் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்தும், படித்து காண்பித்து நான் கையொப்பம் செய்தேன் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரி எனது மருமகன் என்ற காரணத்தினாலும், நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஆகிவிட்டபடியாலும் ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்புக்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,22.07.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.(மு.கூ.பொ.)

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 280/2025 – P.W.2 (LW-2)***

| | |
|---|---|
| *Name* | திவாகர் |
| *Father/Husband's Name* | ராஜாங்கம் |
| *Village* | ஆதிச்சபுரம் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Age* | *29* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 22.07.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சுதாகர் என்பவர் எனக்கு அண்ணன் உறவுமுறை ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் எனக்கு உறவுக்காரர் ஆவார். வழக்கு சம்மந்தமாக நேரிடியாகவும் எதுவும் தெரியாது. நான் கேள்விபடவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவும் இல்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 27.09.2024-ம் தேதியன்று இரவு 8.45 மணியளவில் அ.சா.1 சுதாகர் என் வீட்டிற்கு வந்தார் என்றும், அப்போது என் வீட்டிற்குள் இருந்த ஆஜர் எதிரி அ.சா.1ஐ கொச்சை வார்த்தையால் திட்டினார் என்றும், அ.சா.1 அவரது வீட்டிற்கு திரும்பி சென்றுக்கொண்டிருந்தபோது அவருக்கு பின்னாலே சென்று ஆஜர் எதிரி என் வீட்டு வாசலில் அ.சா.1 ஐ கொச்சை வார்த்தையால் திட்டியும், அருவாள் மனையால் அவரது தலையின் வலதுபக்கமும், இடது கையிலும் வெட்டினார் என்றும், அருகிலிருந்த நானும், ரகுநாத், தேவா,

ஆகியோர்கள் ஓடி வந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாள்மனையால் அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், நான் காயம்பட்ட அ.சா.1 சுதாகர் என்பவரை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன் என்றும், உண்மை சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரியும், அ.சா.1ம் நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஆகிவிட்டபடியாலும், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாகவும், அரசு தரப்புக்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,22.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.(மு.கூ.பொ.)